### ஜோலார்பேட்டை ஒன்றியம் சின்ன வேப்பம்பட்டு பகுதியில்

## உங்கள் ஊரில் உங்களை தேடி உங்களுடன் ஸ்டாலின் திட்டம்: எம்எல்ஏ தேவராஜ் பங்கேற்பு



**திருப்பத்தூர், ஜூலை; 16-** திருப்பத்தூர் மாவட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று உங்களைத் தேடி உங்கள் ஊரில் உங்களுடன் ஸ்டாலின் என்ற திட்டத்தின் கீழ் தமிழ்நாடு முழுவதும் 10,000 சிறப்பு முகாம்களை ஏற்பாடு செய்துள்ளார். மேலும் இந்த சிறப்பு முகாம்கள் நகர்ப்புறங்களில் 13 அரசு துறை சார்பில் 43 சேவைகளும், கிராமப்புறங்களில் 16 அரசுத் துறை சார்பில் 46 சேவைகளும் மேற்கொள்ளப்பட உள்ளன. இந்த நிலையில் கடலூர் மாவட்டத்தில் இருந்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக இத்திட்டத்தை துவக்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து திரும்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை ஒன்றியத்திற்குட்பட்ட சின்னவேப்பம்பட்டு பகுதியில் அமைந்துள்ள சசிபிரியா திருமண மண்டபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் சிவசௌந்தரவல்லி தலைமையில் உங்கள் ஊரில் உங்களைத் தேடி உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.

இதில் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க தேவராஜ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு சிறப்பித்தனர். மேலும் இந்த முகாமில் பல்வேறு பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு தங்கள் குறைகள் அடங்கிய மனுக்களை அதிகாரிகளிடம் வழங்கினர். அதனை பெற்று கொண்ட அதிகாரிகள் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தனர். இந்த நிகழ்வின்போது ஜோலார்பேட்டை ஒன்றிய குழு தலைவர் சத்யாசதீஷ்குமார் உமா கண்ணுறங்கும் ஜோலார்பேட்டை ஒன்றிய செயலாளர். மாவட்ட கவுன்சிலர் சிந்துஜா ஜெகன். மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

### ராணிப்பேட்டை மாவட்டத்தில்

## உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்: அமைச்சர் ஆர்.காந்தி வழங்கினார்



**ராணிப்பேட்டை, ஜூலை, 16-** மக்களைத் தேடி அரசு துறைகள் என்பதன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தலைமையிலான அரசு பொது மக்களின் பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு கண்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று கடலூர் மாவட்டத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்ததை தொடர்ந்து இராணிப்பேட்டை மாவட்டம், ஆற்காடு ஊராட்சி ஒன்றியம், வேப்பூர் வி.பி.பேலஸில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தொடர்ந்து, திமிரி பேரூராட்சி, குரு நாராயணன் மஹால், சோளிங்கர் நகராட்சி ராஜா மணி மஹால், அரக்கோணம் நகராட்சி, டவுன் ஹால், அரக்கோணம் ஊராட்சி ஒன்றியம், தணிகைபோளூர் அரசு மேல்நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை பார்வையிட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சிகளில் கலெக்டர் ஜெ.யு.சந்திரகலா தலைமை தாங்கினார். ஆற்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம் எல் ஏ மற்றும் சோளிங்கர் ஏ.எம்.முனிரத்தினம் எம் எல் ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி தெரிவித்ததாவது:-

இ ரா ணிப் பேட்டை மாவட்டத்தில் முதல்வரின் முகவரித்துறையின் கீழ் உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் நகர்புறத்தில் 97 முகாம்களும், கிராம புறங்களில் 139 முகாம்களும் ஆக மொத்தம் 236 முகாம்கள் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக நகர்புறத்தில் 34 முகாம்களும், கிராம புறங்களில் 46 முகாம்களும் ஆக மொத்தம் 80 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ஆற்காடு ஒன்றியம், வேப்பூரிலும், திமிரி பேரூராட்சியிலும், சோளிங்கர் நகராட்சியிலும், அரக்கோணம் நகராட்சியிலும், அரக்கோணம் ஒன்றியம் தணிகை போளூர் ஊராட்சி ஆகிய இடங்களில் இன்று இம்முகாம் நடைபெறுகிறது. இந்த முகாமில் 15 துறைகள் மூலம் பொதுமக்களுக்கு 46 அரசு சேவைகள் வழங்கப்படும்.

பொதுக்கள் அரசைத் தேடிச் சென்ற நிலை மாறி, அரசுத் துறைகள் மக்களைத் தேடி வந்து மக்களின் குறைகளை கேட்டறிந்து அதற்கு உடனடி தீர்வு காண இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இம்முகாமில் கொடுக்கப்படும் மனுக்களுக்கு அன்றைய தினத்திற்குள்ளாகவோ அல்லது 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படும். மேலும் மனு நிராகரிப்பிற்கான காரணமும் விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்படும். இம்முகாம் குறித்து வீடு-வீடாக சென்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் முகாம் நடைபெறும் நாள் மற்றும் இடம் குறித்த விவரங்கள் மற்றும் பல்வேறு அரசு திட்டங்களின் சேவைகள் குறித்தும் அவற்றின் மூலம் பயனடைவதற்கான தகுதிகள், தேவைப்படும் ஆவணங்கள் குறித்த தகவல் கையேடு மற்றும் விண்ணப்பங்கள் 437 தன்னார்வலர்கள் மூலம். இன்று வரையில், நகர்புறத்தில் 13,897 விண்ணப்பங்களும், கிராமப்புறத்தில் 22,096 விண்ணப்பங்களும் ஆக மொத்தம் 35,993 விண்ணப்பங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் இதுவரையில் 1.15 கோடி மகளிர்களுக்கு மாதந்தோறும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் தமிழக அரசால் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் இரண்டாம் கட்டமாக செயல்படுத்தப்படவுள்ளது. ஆகவே தகுதியுள்ள விடுபட்ட மகளிர் எவரேனும் இருப்பின் முகாம் நடைபெறும் நாளன்று, தங்கள் விண்ணப்பத்தினை அளித்து பயன்பெறலாம்.

அனைத்து உங்களுடன் ஸ்டாலின் முகாம்களிலும் ஒரு மருத்துவ முகாம் நடத்திடவும், பொதுமக்களுக்கு அடிப்படை சிகிச்சைகளும், உடல்நிலை பரிசோதனையும் செய்யப்படும். தமிழ்நாடு முதலமைச்சர் பெண்கள் நலன் சார்ந்த திட்டங்களை அதிகளவில் செயல்படுத்தி வருகின்றார். குறிப்பாக விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, புதுமைப் பெண், காலை உணவு, மக்களைத் தேடி மருத்துவம் இது போன்ற எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இதுபோன்ற திட்டங்கள் மூலம் அனைத்து தரப்பினரும் பயனடைந்து வருகின்றனர். மேலும் கட்சி பேதமின்றி பொதுமக்களின் அடிப்படை தேவைகள், கோரிக்கைகள் நிறைவேற்றித் தரப்படுகிறது. இது போன்று எந்த மாநிலத்திலும் மக்களுக்கான திட்டங்களை எந்த முதலமைச்சரும் இதுவரையில் செயல்படுத்தியது இல்லை. ஆகவே உங்களுடன் ஸ்டாலின் முகாமினை பொதுமக்கள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் பேசினார்.

இன்றைய முகாம்களில் பட்டா, உட்பிரிவு பட்டா ஆணைகள், நகராட்சியில் பெயர் மாற்றம் ஆணைகள், வேளாண்மைத் துறையின் சார்பில் குருவை சாகுபடி தொகுப்புகள், தோட்டக்கலைத் துறையின் சார்பில் ஊட்டச்சத்து பழவகை செடிகள், கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம், பொது மக்களுக்கு மருந்து பெட்டகம் உள்ளிட்ட நலத் திட்டங்களை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் வழங்கினார்.

இந் நி கழ்ச் சி யில் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் செ.தனலிங்கம், திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை சரண்யா தேவி, ஒன்றியக் குழு தலைவர்கள் புவனேஸ்வரி சத்தியநாதன், நிர்மலா சௌந்தர், துணைத் தலைவர்கள் ஸ்ரீமதி நந்தகுமார், ரமேஷ், பேரூராட்சி தலைவர் மாலா இளஞ்செழியன், நகரமன்றத் தலைவர்கள் தமிழ்ச்செல்வி அசோகன், லஷ்மி பாரி, துணைத் தலைவர் பழனி, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் அம்பிகா பாபு, வருவாய் கோட்டாட்சியர்கள் இராஜராஜன், வெங்கடேசன், நேர்முக உதவியாளர் பொது ஏகாம்பரம், நகராட்சி ஆணையாளர்கள் நந்தினி, செந்தில் குமார், வட்டாட்சியர்கள் ஆனந்தன், செல்வி, வெங்கடேசன். ஊராட்சி மன்றத் தலைவர்கள் இராமலிங்கம். வெங்கடேசன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மலை மாநகரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்: மேயர் நிர்மலா வேல்மாறன் தொடங்கி வைத்தார்



**திருவண்ணாமலை, ஜூலை.16-** அரசின் சேவைகள் மக்களுக்கு எளிதில் கிடைத்திட திருவண்ணாமலை மாவட்டத்தில் 387 இடங்களில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நடக்கிறது. இதில் முதற்கட்டமாக நேற்று 114 முகாம்கள் நடந்தன.

பொதுமக்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அவர்களின் கோரிக்கைகள் மற்றும் குறைகளை கேட்டு தீர்வு காண சிறப்பு சிறப்பு முகாம்கள் நடத்த வேண்டுமென தமிழ்நாடு முதலமைச்சர் அறிவித்திருந்தார்.

அதன்படி உங்களுடன் ஸ்டாலின் எனும் திட்ட சிறப்பு முகாமினை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பழையனூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் தலைமையில் நடந்தது. துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி முன்னிலை வகித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்ட தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமினை தொடங்கிவைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

அதன்படி திருவண்ணாமலை மாநகரில் செட்டித்தெருவில் ஒரு தனியார் திருமண மஹாலில் மநராகட்சி சார்பில் 1,5 வார்களுக்கு நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாநகர மேயர் நிர்மலாவேல்மாறன் தொடங்கிவைத்து 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்களிடம் மனுக்களை பெற்றுக்கொண்டார். இதில் உதவி ஆட்சியர் (பயிற்சி) அம்ருதா மாநகராட்சி ஆணையாளர் எஸ்.செல்வபாலாஜி துணை மேயர் சு.ராஜாங்கம் திமுக மாநகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் மற்றும் அனைத்து துறை அதிகாரிகள் திமுக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

## தி.மலை பாஜக அலுவலகத்தில் காமராஜர் பிறந்த நாள் விழா



**திருவண்ணாமலை, ஜூலை.16-** பெருந்தலைவர் காமராஜர் 123வது பிறந்தநாள் விழா நாடுமுழுவதும் நேற்று கொண்டாடப்பட்டது. அதையொட்டி திருவண்ணாமலை அவலூர்பேட்டை சாலையிலுள்ள பாஜக அலுவலகத்தில் பெருந்தலைவர் காமராஜர் 123வது பிறந்தநாள் விழா நேற்று கொண்டாடப்பட்டது.

இதையொட்டி அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த காமராஜரின் திருவுருவ படத்திற்கு மாவட்ட தலைவர் கே.ரமேஷ் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தியதோடு கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கும், சாலையோரத்தில் பணியில் ஈடுபட்டிருந்த தொழி லா ளர் க ளுக் கும் இனிப்பு வழங்கினார்.

இதில் மாநகர தலைவர்கள் பி.மூவேந்தன் பி.சந்தோஷ்பரவசிவம் மாவட்ட அரசு தொடர்பு பிரிவு தலைவர் எஸ்.ஆர்.செல்வம் துணை தலைவர் டி.முருகன் மாவட்ட வர்த்தக அணி செயலாளர் கே.எஸ்.அண்ணாமலை மாநகர துணை தலைவர்கள் கார்த்திகேயன் ஆர்.இளங்கோ மாநகர செயலாளர் டி.முத்துகுமார் புதுப்பாளையம் மண்டல பொதுச் செயலாளர் ஆர்.பன்னீர்செல்வம் மண்டல பொதுச் செயலாளர் ஆர்.ராஜ்குமார் மண்டல துணை தலைவர் வி.ஏழுமலை உள்பட மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அரக்கோணம் வி.ஜி.என். பள்ளியில் 123-வது காமராஜர் பிறந்த நாள் விழா




**அரக்கோணம் ஜூலை 16** இ ரா ணிப் பேட்டை மாவட்டம் அரக்கோணம் டாக்டர். வி.ஜி.என். மெட்ரிக் மேல் நி லைப் பள் ளி யில், பெருந்தலைவர் காமராசரின் 123வது பிறந்த நாள் விழா கல்வி வளர்ச்சி தினமாக கொண்டாடப்பட்டது. இவ் விழா ற்கு தமிழ்நாடு கம்ம நாயுடு மகாஜன சங்கத்தின் மாநில செயல் தலைவர் வி மோகன் நாயுடு தலைமை தாங்கி தொடங்கி வைத்தார் தாளாளர் . ஜிடி என்.அசோகன் நாயுடு, செயலாளர் டிஎஸ் முரளி நாயுடு, பொருளாளர் கே. மோகன் ரங்கசாமி (எ) துரை நாயுடு, முன்னிலை வகித்தனர். பள்ளியின் நிர்வாக குழு உறுப்பினர் ஏவி ரகு நாயுடு உள்ளிட்ட நிர்வாகிகள் விழாவில் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர். இவ் விழாவில் பள்ளி மாணவ மாணவிகள் கர்மவீரர் காமராசரின் பெருமைகளை எடுத்துரைத்தனர். மேலும் குறு நாடகம், கவிதை மற்றும் கட்டுரை போட்டி மற்றும் பட்டி மன்றம் ஆகிய போட்டிகளில் நடத்தப்பட்டது இதில் கலந்துக்கொண்டு வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் சான்றுகள் வழங்கப்பட்டது .

இவ்விழாவில் பள்ளி முதல்வர் டாக்டர். வ. வனிதா மற்றும் ஆசிரிய, ஆசிரியைகள் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers No.18/19 R.N.R. Arcade, Katpadi Road Vellore-4
Ph: 0416-4203997
E-Mail: velloredi@thinaboomi.com
RNI.Regn No.TNTAM/2003/15101
Editor: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

### ராணிப்பேட்டை மாவட்டம்

## திமிரி ஒன்றியம் காவனூரில் காமராஜர் 123-ம் ஆண்டு பிறந்த நாள் விழா



**ராணிப்பேட்டை, ஜூலை ,16-** ரா ணிப் பேட்டை மாவட்ட காங்கிரஸ் கட்சி சார்பில் திமிரி மேற்கு ஒன்றியம் காவனூரில் பெருந்தலைவர் காமராஜர் 123 ஆம் ஆண்டு பிறந்தநாள் விழா கொண் டா டப் பட் டது. நிகழ்ச்சிக்கு ஒன்றிய தலைவர் சீனிவாசன் தலைமை தாங்கினார் . செயலாளர் பாபு காவனூர் ரமேஷ் இஸ்மாயில் சத்யராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் தலைவர் பஞ்சாட்சரம் பெருந்தலைவர் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்தார் .மாவட்ட சிறுபான்மை துறை தலைவர் நிஷாத் அகமத் மாவட்ட துணை தலைவர் ஜி.விநாயகம் ஆகியோர் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்கள் மேல்விஷாரம் நகரத் தலைவர் அப்துல் சுகூர் மாவட்ட சிறுபான்மை துறை துணைத் தலைவர் ரபீக் அகமத் ஆகியோர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டனர் இதைத்தொடர்ந்து நம்பரை கிராமத்தில் சிவகுமார் தலைமையில் பள்ளி மாணவர்களுக்கு பேனா நோட்டு புத்தக வாங்கினார்கள் மாணவர்கள் பெருந்தலைவர் காமராஜரின் புகழை பேச்சுப்போட்டி கவிதை போட்டி நடைபெற்றது.

திமிரி பஜாரில் நகரத் தலைவர் கோபி தலைமையில் மாநில பொதுக்குழு உறுப்பினர் உமா மகேஸ்வரன் மாவட்ட பொதுச் செயலாளர் மண்ணு ஆகியோர் முன்னிலையில் பெருந்தலைவர் காமராஜரின் படம் அலங்கரிக்கப்பட்டு மாலை அணிவித்து இனிப்புகள் வழங்கப்பட்டது.




**அரக்கோணம் ரோட்டரி சங்க பதவியேற்பு விழாவில் புதிய தலைவராக மனோகர் பிரபு செயலாளராக லட்சுமிபதிக்கு சிறப்பு விருந்தினர்கள் ஆளுநர் சுரேஷ் மற்றும் போலியோ பிளஸ் ஒருங்கிணைப்பாளர் முத்து ஆகியோர் பதவி பிரமானம் செய்து வைத்தனர். மேலும் போலியோ பிளஸ்சேர்மனாக ஆர்.வெங்கட்டரமணன் மற்றும் நிர்வாகிகளாக இளங்கோ, வடிவேலு, எஸ்.டி.ராஜேஷ், விஏஓ வெங்கடேசன் உட்பட பலரும் பொறுப்பேற்றுக் கொண்டனர்.**



**புதுச்சேரி அரசு செய்தி மற்றும் விளம்பரத்துறை சார்பில் காமராஜர் பிறந்த நாளையொட்டி அவரது உருவ சிலைக்கு முதல்வர் ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், அமைச்சர்கள் லட்சுமி நாராயணன், ஜான் குமார், துணை சபாநாயகர் ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ கேடி ஆறுமுகம், கே.எஸ்.பி.ரமேஷ், நேரு , பாஸ்கர், பிரகாஷ் குமார் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.**

### அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி சார்பில்

## காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



**அரக்கோணம் ஜூலை 16** இராணிப்பேட்டை மாவட்டம் அரக்கோணம் சுவால்பேட்டையில் பெருந்தலைவர் காமராசரின் முழு உருவசிலை உள்ளது இந்த சிலை முன்பு அண்ணாது 123-வது பிறந்த நாளை அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சிசார்பில் கொண்டாடபட்டது.

இதனை முன்னிட்டு காமராசர் சிலைக்கு அகில இந்திய ஜனநாயக மக்கள் கட்சி நிறுவன தலைவர் டாக்டர் வி எஸ் ஐசக் அய்யா மாலை அணிவித்து அவருக்கு புகழ்ஞ்சலி செலுத்தினார் அப்போது கல்லூரி துணை முதல்வர் திருவழகன் பேராசிரியர் பாபுஜி ஆகியோரும் புகழ்ஞ்சலி செலுத்தினர் நிகழ்ச்சியில் மணி நகர செயலாளர் சரவணன் டேவிட் சதீஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர் முன்னதாக மாவட்ட செயலாளர் ஸ்ரீதர் அனைவரையும். வரவேற்றார்.

## செஞ்சியில் காமராஜர் பிறந்த நாள் விழா: மஸ்தான் எம்எல்ஏ மாலை அணிவித்து மரியாதை



**செஞ்சி ஜூலை-16,** பெருந்தலைவர் காமராஜர் 123-வது பிறந்தநாள் விழா இன்றுதமிழக முழுவதும் சிறப்பாக கொண்டாடப் பட் டது. வி ழுப் பு ரம் வடக்கு மாவட்ட திமுக சார்பில் பெருந்தலைவர் காமராஜரின் பிறந்தநாள் விழா செஞ்சியில் கொண்டாடப்பட்டது. செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு செஞ்சி நகர செயலாளர் கார்த்திக் தலைமை தாங்கினார் .செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியர் அலி மஸ்தான், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த பெருந்தலைவர் காமராஜரின் திருவுருவப்படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்திபொதுமக்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, ஒன்றிய பெருந்தலைவர்கள்மேல்மலையனூர் கண்மணி நெடுஞ்செழியன், வல்லம் அமுதா ரவிக்குமார்,மேல்மலையனூர் ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், பேரூராட்சி மன்ற கவுன்சிலர்கள்அஞ்சலை நெடுஞ்செழியன், சங்கர், நூர்ஜகான் ஜாபர்,நிர்வாகிகள் செயல் மணி, சிங்கம் சேகர், சம்பத் குமார், தொண்டரணி பாஷா, ரோமியன், பிரபு, கோகுல்,தொமுச அரி கிருஷ்ணன்,வழக்கறிஞர் அணி சுதாகர்,ராம்குமார்,ஜாபர்,உள்ளிட்ட பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தின பூமி
நாளிதழில்
விளம்பரம்
செய்து
பயன்
பெறுங்கள்

